# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.3604/C/2024

திரு ஜோ. சதீஷ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மை சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,
எண்.76, மவுண்ட் சாலை, கிண்டி,
சென்னை - 600 032. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 17.10.2023 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 21.11.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 10.01.2024 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 07.02.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 20.03.2024 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு ஜோ. சதீஷ் என்பவருக்கு பதிலாக அவரது தந்தை திரு. S. ஜோதிமணி என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு இரா. குணசீலன், முதன்மை சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், கிண்டி, சென்னை என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கீழ்க்கண்ட விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

I have applied and appeared for written examination for the post of Assistant Engineer (Environment) on 11.10.2020. Also, I have appeared for interview in Tamil Nadu Pollution Control Board (TNPCB) on 07.11.2020 via. Notification No.1/2019 Dated 06.03.2019 and Notification No.2/2019 Dated 05.03.2020.

1. Copy of selected priority candidates Rank List with their marks.
2. Copy of selected SC priority candidates Rank list with their marks.
3. Copy of selected GT candidates Rank list with their marks.
4. Copy of office note file submitted to higher officers for the appointment of candidates under Notification No.1/2019 Dated 06.03.2019 and Notification No.2/2019 Dated 05.03.2020.
5. Copy of vacancy lists for appointments made in 2022 etc.,

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், மேற்படி தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு க.எண்.த.ந.மா.க.வா/த.பெ.உ.ச/023622/கோ.எண்.417/2023 நாள் 21.11.2023, க.எண்.000898/மே.மு.எண்.03/2024 நாள் 07.02.2024 மற்றும் கடித எண்.த.நா.மா.க.வா/த.பெ.உ.ச./022493/2025 நாள் 03.02.2025 ஆகிய தேதிகளிட்டு மனுதாரருக்கு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால், மனுதாரருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.3604/C/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத்தகவல் அலுவலர் /
முதன்மை சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,
எண்.76, மவுண்ட் சாலை, கிண்டி,
சென்னை - 600 032.

**<u>வழக்கு எண்.SA.3604/C/2024</u>**

**<u>மனுதாரர்</u>**

திரு ஜோ. சதீஷ், த/பெ. திரு. S. ஜோதிமணி,
பழைய எண்.4/133, புதிய எண்.4/795,
3-வது மெயின் ரோடு, விடுதலை நகர்,
எஸ். கொளத்தூர், சென்னை - 600 129.

Copy to: File
SNPS / 09.04.2026